★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 19உ வெள்ளி (1—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 20உ சனி (2—6—56) [இதழ் 300

சபைத் தலைவரை வெளியேறக் கூறிய உறுப்பினர்

லாகூர், மே 31—

மேற்கு பாகிஸ்தான் சட்டசபைத் தலைவரை வெளியேறுமாறு முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூறினாராம்.

ஜாபர் உசேன் என்ற உறுப்பினர் பேசஎழுந்தபோது, சபைத் தலைவர், அவரை உட்காருமாறு கூறினாராம்; ஆனால் உறுப்பினரோ, பேசுவதற்குத் தனக்குரிய உரிமையை வலியுறுத்தி, உட்கார மறுத்தாராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

பம்பாய் நகர் கருநிறம் பூண்டது

திருச்சியில் மாபெரும் தீ விபத்து

நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் வெந்து சாம்பலாயின

துன்பம் துடைக்கக் கழகத் தோழர்கள் புரிந்த வீரப்பணி!

திருச்சி, மே 31—

இன்று பகல் 11½ மணி சுமாருக்கு, திருச்சி சாயக்காரத் தெருவில் ஏற்பட்ட தீ; சமஸ்பிரான் தெரு, பெரியகடை வீதி, வரதராச பெருமாள் கோயில் தெரு, மக்தூமலிகான் தெரு, மல்லிசாகிப் தெரு, மாப்பிள்ளை நாயக்கன்குளத் தெரு ஆகிய இடங்களில் பெரும் அளவில் பரவி, நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளைச் சாம்பலாக்கிவிட்டன.

சரசுவதி ஆரம்பப் பாடசாலையும், அதனை அடுத்துள்ள பார்ப்பனர்கள் வாழும் பகுதியான ஒரு பெரிய ஸ்டோரும், மக்தூமலிகான் தெருவில் ஏராளமான முஸ்லிம் ஏழைக் குடும்பங்கள் வாழும் குடில்களும் எரிந்து சாம்பலாகிவிட்டன; ஏழெட்டு கால்நடைகள் முழுதும் நின்றபடியே வெந்துவிட்டன; மரங்கள் சில கருகி சாய்ந்தன; அனலின் ஆவி தாங்காமல், ஆண்கள் — பெண்கள் — குழந்தைகள் புழுவாய்த் துடித்து மயக்கமுற்றனர். பொருட்சேதம் ஏராளமாக மதிப்பிடப்படுகிறது!

பகல் 11½ மணிக்கு ஏற்பட்ட தீ, மாலை 3½ மணி சுமாருக்கு அடங்கியது. திருச்சி தீயணைக்கும் படையில் ஒரு பிரிவில் காஞ்சீபுரம் சர்வோதய சம்மேளனத்துக்கும், மற்றொரு பிரிவு புள்ளம்பாடி அருகிலும் சென்றுவிட்டதால், குறிப்பிட்ட நேரத்தில் தீயணைக்கும் படை தீயை அணைக்க முடியாமல் போகவே, திருச்சி நகராட்சி தண்ணீர் உந்து மூன்றும், திருவரங்கம் நகராட்சி தண்ணீர் உந்து வண்டி ஒன்றும், நிலைமையைச் சமாளிக்க முடியாது போகவே, தஞ்சையிலிருந்து தீயணைக்கும் படை வரவழைக்கப்பட்டது!

தீப்பிடித்த சிறிது நேரத்திற்குள்ளாகவே, செய்தி அறிந்ததும் திருச்சி திராவிடப் பண்ணையில் தங்கியிருந்த தி. மு. கழக முன்னணித் தோழர்கள் எம். எஸ். மணி, அம்பில் தர்மலிங்கம், பராங்குசம், ராபி, நாகசுந்தரம் எம். சி., மு. கருணாநிதி, கருணானந்தம், முத்துகிருட்டிணன், அருணகிரி மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் விரைந்து சென்று, தீ மேற்கொண்டு பரவாதிருக்கவும், தீப்பற்றிய வீடுகளிலிருந்து பெண்கள், குழந்தைகளைக் காப்பாற்றவும் முனைந்து பாடுபட்டனர்; பொது மக்களும் கூட இருந்து ஒத்துழைத்தது குறிப்பிடத்தக்கது.

தோழர் அம்பில் தருமலிங்கம், இரண்டு கால்களிலும் ஏற்பட்ட தீப்புண்களையும் பொருட்படுத்தாது, மக்களுக்கு முனைந்து சேவை செய்தார்.

தோழர் நாகசுந்தரம் எம்.சி. அவர்கள், தீப்பிடித்த வீடுகளிலிருந்து உயிருக்கு மன்றுடிய மூன்று குழந்தைகளையும், தோழர் ராபி அவர்கள், கேட்பாரற்றுக் கிடந்த இரு குழந்தைகளையும், காப்பாற்றினர்.

தீயால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை, முதல் உதவியாக, சுமார் ஆயிரம் படி பால், தி. மு. கழகம் நகரசபை உறுப்பினர் ஆர். நாகசுந்தரம் மூலமாக பாதிக்கப்பட்ட எல்லாத் தெரு—வீடுகள்தோறும் சென்று வினியோகம் செய்யப்பட்டது.

தோழர்கள் ராபி; அருணகிரி—லத்தீப்—கே. பி. எஸ். கோன்; பாண்டு - பழனி - சிங்காரம் - கலியராசு — செகநாதன்; ஜி கே. சாமி, மற்றும் ராபி குழுவினர்களும், கழகத் தோழர்கள் பலரும் சேர்ந்து பால்வினியோகம் செய்து மக்கள் மனநிலையை ஒருவாறு அமைதியுறச் செய்தார்கள்.

இன்று (1—6—56) நகர தி. மு. கழகத்தின் சார்பாக தீயால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அரிசி வழங்கப்படுகிறது.

(ந. நி.)

நேருவுக்கு மராட்டியர் கருப்புக் கொடி வரவேற்பு

பாராளும் பண்டிதருக்குப் பள்ளிச் சிறுவர்கள் பாடம் புகட்டிய காட்சி

சம்யுக்த மராட்டியம்கோரி அமைதியான நடவடிக்கை

வீடுகளை, கருப்புக்கொடிகள் சுற்றிவளைந்துக் கொண்டிருந்தன.

வரவேற்பு வளைவுகள், கருப்புத் துணிகளைத் தாங்கி நின்றன.

வீரர் கூட்டம், கருப்புக்கொடிகளைக் கையிலேந்தி அணிவகுத்து நின்றது.

'பம்பாய் மராட்டியத்துக்கே!' 'சம்யுக்த மராட்டியம் எங்கள் பிறப்புரிமை!'—என்பன போன்ற உரிமை கோரும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட சிவப்பு அட்டைகளைத் தூக்கிப் பிடித்து நின்றிருந்தனர், மராட்டிய வீராங்கனைகள்!

சுவர்கள், 'பம்பாய் மராட்டியருக்குத்தான்!'—என்ற வாசகங்களைத் தெளிவாக அறிவித்துக்கொண்டிருந்தன.

மராட்டியர்களின் உள்ளக்கிடக்கை, நியாயம் பெறத் துடித்து நிற்கும் பேராவல், அநீதியை எதிர்த்துப் போரிட துணிந்துவிட்ட வீர உணர்வு—இவற்றை பம்பாய் நகர வீதிகள் முழுதும், தெளிவாக எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன.

பாராளும் பண்டித நேருவும், காங்கிரஸ் தலைவர் தேபரும், அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்திற்காக பம்பாய் வருவதை ஒட்டித்தான், மராட்டியரின் உணர்ச்சி வெள்ளம், நகரில் பெருக்கெடுத்துக் காட்சி தந்துகொண்டிருந்தது.

விமான நிலையத்திலிருந்து பண்டிதர், மூடிய காரில், முன்னும் பின்னும் போலீஸ் புலிகள் பாதுகாத்துவர, 'இராஜபவனத்'திற்குச் செல்லும் வழி நெடுக, கருப்புக் கொடிகளாலும், 'பம்பாய் மராட்டியருக்கே!' என்ற வாசகம் பொறித்த சிவப்பு அட்டைகளாலும்தான் வரவேற்கப்பட்டார்.

வழிநெடுக, குவிந்திருந்த மராட்டியர் எவரும், கோஷம்கூட எழுப்பவில்லை. அமைதியாகவே நின்றிருந்தனர், கருப்புக் கொடிகளைத் தாங்கிக்கொண்டு!

அவர்கள் அமைதியாக அணிவகுத்து நின்றிருந்தது, 'புலி பதுங்குவது, பாய்வதற்காகத்தான்' என்ற அச்சத்தை ஊட்டிற்று போலும், அதிகாரிகளுக்கு!

ஆயிரக்கணக்கான போலீசார், வேறு மாநிலங்களில் இருந்தெல்லாம் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர், தலைவர்களுக்குப் பாதுகாப்புத்தர—நகரின் அமைதி குலையாது காக்க—என்ற சாக்குக் கூறி!

தெளிவான நீதியை, மக்களின் மகோன்னதமான நியாய வரம்பிற்குட்பட்ட அபிலாஷையைத் துச்சமென மதித்துவிட்டு, எதேச்சாதிகாரமாக நடந்துகொள்வது எப்படி என்பதற்குப் புதியதோர் நடைமுறை வகுத்துக் காட்டிய பிரதமர் பண்டித நேருவுக்கு, தனது அநியாயத் தீர்ப்பினால் உணர்ச்சிப் பிழம்புகளாக மாற்றப்பட்டிருக்கும் மராட்டிய மக்கள் தங்கள் உள்ளக் கிடக்கையை அமைதியாக எடுத்துக் காட்டிய முறை, அரியதோர் பாடத்தைப் புகட்டியிருக்க வேண்டும்.

'இராஜபவனத்துக்குச் சற்று தூரத்தில், மராட்டியச் செல்வங்களான பள்ளிச் சிறுவர்களும், சிறுமிகளும் ஆயிரக் கணக்கில் கூடிநின்று, கருப்புக் கொடிகளை தங்கள் சின்னஞ் சிறு கரங்களில் ஏந்திக்கொண்டு, மழலை மொழியில், 'பம்பாய் மராட்டியருக்கே' 'சம்யுக்த மராட்டியம் வேண்டும்,' 'மராட்டியருக்கு நீதி வழங்கு!' என்ற குரல் கொடுத்த காட்சி, மறக்கமுடியாது! மனங்களை உருக்கும் வன்மை வாய்ந்தது!

'குழந்தைப் பிரியர்' என்று புகழப்படும் நேரு, இந்தக் குழவிகளின் குரல் கேட்டு மனம் உருகினாரோ என்னவோ?

இதே குழந்தைகள்தான் சென்ற ஆண்டில், பண்டிதர், ரஷ்ய பவனி முடித்துத் திரும்பிய போது மாலையிட்டு, மங்களத் திலகமிட்டு, மகுடம் சூட்டி வரவேற்று, ஆடிப்பாடிக் களித்தன.

இன்று அதே குழந்தைகள் — பள்ளிச் சிறுவர், சிறுமியர்தான், தாய்நாட்டிற்காகக்குரல் எழுப்பியிருக்கின்றனர்.

பண்டிதரைப் போலவே தேபரும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் கருப்புக் கொடிகளாலும், சம்புக்த மராட்டிய கோஷங்களாலும் வரவேற்கப்பட்டிருக்கின்றனர்.

காங்கிரஸ் செயற்குழுக் கூட்டங்கள், எந்தவித விசேஷ முக்கியத்துவமும் பெற்றவை அல்ல என்ற எண்ணம் வளர்ந்து, நாள்கள் சென்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது; ஆனால் பம்பாயில் இப்போது கூடும் செயற்குழு, மராட்டியரின் கிளர்ச்சியினால் ஓரளவு சிறப்பையும், பிரசுரத்தையும் பெறுகின்றன.

ஜூன் முதல் தேதியன்று துவங்கும் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தின் கூடவே, மராட்டிய பரிஷத்தின் மாநாடு ஒன்றும் கூடுகிறது.

பிப்ரவரியில் அமிர்தசரசில் அகாலியர் நடத்திய மாநாடு, எப்படி காங்கிரஸ் மாநாட்டிற்கு அருகிலேயே ஒரே நாளில் நடைபெற்றதோ, அதேபோல இப்போதும், பம்பாயில், மராட்டியர் நடத்துகின்றனர்.

'இன்னும் இரண்டு மூன்று நாட்கள் அமைதியாகக் கழிய வேண்டுமே' என்று போலீசார், வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கின்றனராம்!

வழக்கமாக பண்டிதரை வரவேற்க, பம்பாய் விமான நிலையத்தில் பல்லாயிரம் மக்கள் திரளுவர். ஆனால் இந்த முறை பண்டிதரை வரவேற்க பெருங் கூட்டம் எதுவும் இருக்கவில்லை.

விமான நிலையத்திற்கு வெளியேயும், சாலைகளிலும் நேருவை வாழ்த்துவதற்காக மக்கள் கூடுவது வழக்கம்; ஆனால், இப்போது, விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் மட்டுமே [illegible]

[illegible]

தமிழ் படிப்படியாக ஆட்சி மொழியாகுமாம்

மந்திரி பக்தவத்சலம் தகவல்

மதுரை மே 31—

'சென்னை மாநிலத்தில், தமிழ் படிப்படியாக, நிர்வாக மொழியாக—ஆட்சி மொழியாக ஆக்கப்படும்'

என்ற தகவலைத் தந்திருக்கிறார், மந்திரி பக்தவத்சலம்.

மதுரைத் தமிழ் சங்கப் பொன் விழாவில் பேசிய அவர், திடீரென ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கினால், நிர்வாகம் ஸ்தம்பித்துப் போகும்; அதனால்தான், படிப்படியாக பலவேறு கட்டங்களில் தமிழ் மொழியைப் புகுத்த எண்ணியுள்ளோம்,' என்றும் அவர் கூறினாராம்.

'கடந்த இரண்டு ஆண்டுகளாக, வரவு - செலவுத் திட்டம் தமிழ் மொழியிலும் அச்சிடப்படுகிறது; சில மாவட்டங்களின் நிர்வாக அறிக்கைகளும் தமிழிலும் எழுதப்படுகின்றன. மாநிலத்தில் கடிதப் போக்குவரத்து தமிழ் மொழியில் நடைபெறுவதற்கான சோதனை நடைபெற்று வருகிறது,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும் பேசிய அவர், தமிழ் மொழி வளர்ச்சிக்கு மதுரைச் சங்கம் செய்துள்ள தொண்டினைப் பாராட்டிவிட்டு, பெரும் தமிழ் இலக்கியங்களை, உலகத்தின் இதர சிறந்த மொழிகளில் மொழி பெயர்க்கவேண்டும் என்றும் கூறியதாகத் தெரிகிறது.

அமைச்சரவைவிலகியதாம்

கர்னல் ஷெர் அகமத் தலைமையிலுள்ள ஆஜாத் காஷ்மீர் அமைச்சரவை இராஜினாமாச் செய்துவிட்டதெனத் தெரிகிறது. போட்டிக் குழுத் தலைவர் லைஸ் முகமத் ஷா புதிய அமைச்சரவையை ஏற்படுத்துவாராம்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

கூடி நின்றிருந்திருக்கின்றனர்.

நகருக்குள் வந்தபின்புதான், மராட்டியர்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி நின்று கருப்புக்கொடி வரவேற்பு அளித்திருக்கின்றனர்.

இதற்குக் காரணம் பம்பாய் நகர் பற்றி, இந்திய சர்க்கார் மேற்கொண்ட, எதேச்சாதிகார முடிவு தான்என்பதுதெளிவாகதெரிந்தது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—6—'56 வெள்ளி

சூளுரைத்துக் கொள்க!

தமிழ்நாடு காங்கிரஸ், ஆச்சாரியார் கோஷ்டி—காமராசர் கோஷ்டி என இரண்டு கோஷ்டியாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது.

அவ்விரண்டு கோஷ்டியும் ஒன்றை ஒன்றுத் தூற்றிக் கொண்டும், ஒன்றை ஒன்று வீழ்த்தச் சதிசெய்து கொண்டும் இருப்பதே, அவைகளின் கட்சிப் பணியாகும்.

பார்ப்பன மக்களின் ஏக போக ஆதிக்கத்திற்கு எதிராக, பார்ப்பனரல்லாதார் இயக்கம் உருவாக்கிய சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஆச்சாரியார் கொட்டத்தை அடக்குவதில் காமராசர் கோஷ்டி வெற்றி பெற்று இருக்கிறது.

அதே போன்று, காலஞ்சென்ற காந்தியாரின் பலத்த ஆதரவுடன், காமராசர் கோஷ்டியை விரட்டி அடிப்பதில், ஆச்சாரியார் கோஷ்டியும் வெற்றி கண்டிருக்கிறது.

இந்தக் கோஷ்டிச் சண்டை தமிழ் நாட்டு காங்கிரசிற்குள், கடந்த இருபதாண்டுக் காலமாகவே நடைபெற்று வருகிறது.

இவ்விரண்டு கோஷ்டிகளுக்கிடையில், இதுவரை ஏற்பட்டுள்ள சச்சரவுகளில், முழு வெற்றித் தோல்வி எந்த ஒரு கோஷ்டிக்கும் கிட்டவில்லை.

இரு கோஷ்டிக்கும் அடிப்படை பலமாக இருந்துவருகிற இரு தலைவர்களும் உயிருடன் இருக்கின்றவரையில் தமிழ்நாடு காங்கிரசைவிட்டு கோஷ்டிச் சண்டை மறையப்போவதும் கிடையாது.

காமராசர் கோஷ்டி ஒன்றைக் கூறுகிறது என்றால், அதைத் தவறு என்று கூறவும், அதற்கு எதிராக பொதுமக்கள் கருத்தைத் திரட்டவும், ஆச்சாரியார் கோஷ்டி தவறுவதே கிடையாது.

அதே வழியைப் பின்பற்றி, ஆச்சாரியார் கோஷ்டி மேற்கொள்ளும் ஒரு செயலை ஒழித்துக்கட்டுவதற்கு, காமராசர் கோஷ்டியும் முயலாமல் இருப்பது கிடையாது.

இவ்விரு கோஷ்டிகளுக்கும் பொதுவான கொள்கை அடிப்படையில் பிணக்கு எதுவும் கிடையாது.

அதிகாரம்யாரிடத்தில் இருப்பது என்பதுதான் இரண்டு கோஷ்டியும் சண்டை இட்டுக் கொள்வதற்கான காரணம்.

சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அதிகாரத்தை ஏற்கும் அளவிற்குப் பெரும்பான்மை இல்லாமல் போய்விட்டது. காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட அந்த நெருக்கடி, ஆச்சாரியார் மீண்டும் தமிழ் நாட்டு அரசியலில் ஆதிக்கம் பெறுவதற்கு ஒரு அரிய வாய்ப்பாகப் போய் விட்டது.

காங்கிரஸ் கட்சி நலன் என்ற வகையில், மறுபடியும் ஆச்சாரியார் தமிழ் நாட்டு அரசியலில் ஆதிக்கம் பெறுவதை காங்கிரஸ் மேலிடமும் ஒப்பியது. அதற்கு காமராசர் கோஷ்டியும் ஒத்து ஊதியது.

பெற்றிருந்த அரசியல் ஆதிக்கத்திலிருந்து ஆச்சாரியாரை விரட்டி அடிக்கத் தருணம் பார்த்துக்கொண்டிருந்த காமராசர் கோஷ்டிக்கு, ஆந்திரப் பிரிவினை அதற்கானதோர் தருணமாகிவிட்டது.

அதுவுமன்றி, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டமும், அதன் விளைவாக நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புணர்ச்சியும், ஆச்சாரியாரிடமிருந்து அரசியல் ஆதிக்கத்தைப் பறிக்கவும் அதைத் தாமே செலுத்தும் தகுதி பெறவுமான நிலையை காமராசருக்குத் தந்தது.

அதுமுதல் காமராசர் கோஷ்டிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதில், காரணம் இருந்தாலும் இல்லாமற் போனாலும், ஆச்சாரியார் கோஷ்டி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

காங்கிரஸ் மேலிடத்து ஆதரவு பெற்றுள்ள தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்து, காமராசர் கோஷ்டியை எதிர்ப்பதற்குரிய சிறந்த ஆயுதமாக ஆச்சாரியார் கோஷ்டிக்குக் கிடைத்துவிட்டது. எனவே, ஆச்சாரியார் கோஷ்டியும் தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தைப் பற்றிக்கொண்டு, காமராசர் கோஷ்டியை முறியடிக்க முயற்சித்து வருகிறது.

இந்தக் கோஷ்டிச் சண்டையில் எவர் தோற்றாலும் எவர் வெற்றி பெற்றாலும், நமக்கு அதுபற்றி துளியும் அக்கறை கிடையாது.

இவர்களுடைய கோஷ்டிச் சண்டையால் தமிழ்நாட்டு மக்களின் நலன் பாதிக்கப்படுகிறதே என்பது பற்றித்தான் நாம் பெரிதும் கவலைகிறோம்.

இவ்வாறு அதிகாரத்திற்கு அடித்துக்கொள்ளுகிற இரு கோஷ்டிகளும், காந்திய வழியில் வந்தவர்கள் எனத் தங்களை கூறிக்கொள்ளாது இருக்கும் நாளும் கிடையாது.

மக்கள் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டுதான் தாங்கள் பணியாற்றுவதாக இவ்விரு சாராரும் கூறிக்கொள்ளவும் செய்கின்றனர்.

இவ்விருசாராரும் ஆஸ்திகம், அருள்நெறி, உடைமைப் பற்றுத்தல், ஆகிய தத்துவங்கள் பற்றியும் பேசித் திரிகின்றனர்.

அதைப் பேசித் திரியாத நம் போன்றவர்களை நிந்திக்கவும் செய்கின்றனர்.

இந்த அரசியல் அதிகார வெறிபிடித்தலையும் தான்தோன்றிகளிடமிருந்து, தமிழ் நாட்டு அரசியலை விடுவிக்க வேண்டும்.

இவ்விரு அதிகார வெறியர்களின் செயலால் கறைபட்டுக் கிடக்கும் தமிழ் நாட்டு அரசியலைப் புனிதப்படுத்த வேண்டும்.

அப்பொறுப்பான பணியைச் செய்து முடிப்பதாக தமிழ் நாட்டு மக்கள் சூளுரைத்துக் கொள்ளவேண்டும்.

அப்புனிதப் பணியை முன்னிருந்து நிறைவேற்றித் தர நமது முன்னேற்றக் கழகம் முன்வந்து இருக்கிறது.

மக்கள் ஆணைவழி செயல்படும் பண்பு கொண்டிருப்பது முன்னேற்றக் கழகமாகும் என்ற உண்மை திரிசிரபுர மாநாட்டின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, அடுத்தப் பொதுத் தேர்தலில் கோஷ்டிச் சண்டைகளுக்குப் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் உள்ள காங்கிரஸ் கட்சியை, ஆட்சிப் பொறுப்பில் இருந்து விரட்டி அடித்து, ஆட்சிப்பீடத்தை புனிதப்படுத்த தமிழ்நாட்டு மக்கள் சூளுரைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மக்களாட்சி இப்பகுதியில் மலருவது சாத்தியமாகும்.

அல்ஜீரிய சிக்கலுக்கு முடிவு காண!

'பிரான்ஸ் 10 ஆண்டுகாலம் தாமதிக்கக்கூடாது'

டுனீஷியப் பிரதமர் கருத்து

டுனீஸ், மே 29—

"முன்னாள் பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்ஸ் தந்திருந்த திட்டப்படி, உள் சுயாட்சி பெறுவதற்கு அல்ஜீரிய தேசியவாதிகள் சம்மதம் தெரிவிக்கலாம்.

"பிரெஞ்சு ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான இராணுவ நடவடிக்கைகளுடன் அல்ஜீரிய தேசியவாதிகள் இராஜதந்திர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது அவசியம்.

அல்ஜீரியா முழு விடுதலை பெறுவதற்கு சமரச ஏற்பாடு ஒரு முதற்படியாக இருக்கலாம்," என்று, டுனீஷியப் பிரதமர் ஹபீப் பர்கூபா, டுனீஷிய அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

அல்ஜீரிய மக்களுடன் அளவு கடந்த தொடர்பு உடையது, டுனீஷியா.

இந்தோ-சீனாவில் செய்தது போல பிரான்ஸ், அல்ஜீரிய விவகாரத்திற்கு முடிவுகாண 10 ஆண்டுகள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் டுனீஷியப் பிரதமர் எச்சரித்திருக்கிறார்.

டுனீஷிய தேசிய இராணுவம் ஒன்று, வரும் ஜூன் 16-ந் தேதியன்று அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

செலவுகளைக் கண்காணிக்க ஏற்பாடு வேண்டும்!

புதுடில்லி, மே 29—

"இரண்டாம் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு பெரிதாக விரிந்துகொண்டே செல்வதால், நிதி நிலையைக் கட்டுப்படுத்திக் கொண்டுவரும் விவகாரம் அதிக முக்கியத்துவம் பெற்றதாக ஆகி வருகிறது.

"ஒரு திட்டம் என்பது, சர்க்காரின் செலவுகளுக்கான திட்டம் மட்டுமல்ல!

"சிக்கனம், திறமை இவற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்டு தீட்டப்படுவதே திட்டம் எனப்படும்.

"வேறெப்போதும் இல்லாத அளவு, இப்போது, தேசிய வருமானத்தின் பெரும் பகுதி சர்க்கார் இலாகாக்களால் செலவு செய்யப்படுகிறது என்பதால், செலவுகளைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவது மிக அவசிய மான ஒன்று என்பது தெளிவு," என்று, பொதுக்கணக்கு தணிக்கைக் குழு, மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அதன் 16-வது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சரின் காரும் தாக்கப்பட்டதாம்

பாடாலா, மே 30—

மகா பஞ்சாப் சமிதிக்கும், காங்கிரசுக்கும் ஏற்பட்ட மோதுதலின் விளைவாக 17 பேர் காயமடைந்தனர் என்று தெரியவருகிறது; ஒரு அமைச்சரின் காரையும் மகா பஞ்சாப் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கினராம்.

'குரங்கு கை பூமாலை போன்று குமரிமுனை சீரழிந்து கிடக்கிறது'

'இருட்டைக் கொண்டு ஓட்டை அடைப்பதாக இருக்கிறது'

'விவாத ரீதியில் பதில் தருவதாக இல்லை'

"தென்னிந்தியாவில் இரயில் பாதைகள் அமைப்பதற்கான ஒரு அம்சம்கூட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை—என்று, மைசூர் முதன் மந்திரி கே. அனுமந்தையா கூறியதற்கு நேருஜி பதில் கூறியிருக்கிறார்.

"வட இந்தியாவுக்குச் சலுகை காட்டி வந்தது பிரிட்டிஷாரே தவிர, சுதந்திர சர்க்காரல்ல—என்று, பிரதமர் சுட்டிக்காட்டுகிறார்.

"நாட்டில் நடக்கும் தவறுகளுக்கெல்லாம் முன்பு ஆண்ட பிரிட்டிஷார்தான் பொறுப்பு என்று கூறி, தங்கள் தவறை மறைக்கும் மனோநிலை, பொறுப்புள்ளவர்களிடமிருந்து இதற்குள் அகன்றிருக்க வேண்டும்.

"இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில் தென்னிந்தியாவுக்கென ஒரு அங்குல இரயில் பாதைகூட சேர்க்கப்படவில்லையே என்று கேட்டதற்கும், முன்புள்ள அடிமை வாழ்வை நினைவுபடுத்துவதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?

"நேருஜியின் பதில், இருட்டைக் கொண்டு ஓட்டை அடைப்பதாக இருக்கிறதே ஒழிய, விவாத ரீதியில் பதில் தருவதாக இல்லை.

"வடஇந்தியாவின் பல பாகங்களிலும் இரட்டைப் பாதைகள் போட்டு இரயில்வேயைப் பெருக்கி வரும்போது, தென்னிந்தியாவில் ஒரு பாதைகூட அமைக்காமலிருப்பதை அநீதியிலும் அநீதி—என்று, எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை.

"இந்தியாவின் தென்கோடியும்—பூகோளப் படத்தின் முக்கிய இலக்காக விளங்குவதுமான கன்னியாகுமரி முனையை இந்தியாவின் இதர பகுதியோடு இணைக்க முனையாத இந்திய சர்க்காரின் சாதனைகளை யார்தான் பாராட்டுவார்கள்?

இந்தியா தேசத்திற்கு, ஒரு முனை, இயல்பாக வாய்ந்திருக்கிறது. எவ்வளவோ நாடுகளுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்காமல் இந்தியாவைப் பார்த்து அவைகள் கொட்டாவி விடுகின்றன.

"தென் ஆப்பிரிக்காவில் உள்ள நன்னம்பிக்கை முனை போன்று ஜெகஜோதியாகப் பிரகாசிக்க வேண்டிய ஆசியாவின் தென்முனை, 'குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போன்று சீரழிந்து கிடக்கிறது' என்று சொல்ல முற்படுவதற்கு கூச்சம் ஏற்படத்தான் செய்கிறது. இருந்தாலும் உண்மையை மறைத்துவைக்க வேண்டாமென்பதற்காக, மேற்கண்ட வாக்கியத்தை எடுத்துக் காட்ட நேர்ந்தது.

"மூன்று கடல் கூடுகிறது; கடலில் உதிக்கும் சூரியன் கடலிலேயே அடையும் அற்புதமான காட்சியை அள்ளிக் கொடுக்கும் ஒரு பொக்கிஷத்தை இந்தியா மூடி வைத்திருக்கிறது — என்று கூட குற்றம் சாட்ட முடியும்!

"காங்கிரஸ் பலம் கொண்ட இராட்சச இராஜ்ய அங்கத்தினர்களுக்குப் பணியும் ஒரு பொதுவான கொள்கையைத்தான் மத்திய சர்க்கார் கடைப்பிடிக்கிறதே தவிர, நியாயமான தேவைகளை சர்க்கார் இரண்டாவதாகத்தான் கொண்டிருக்கிறதென்று சந்தேகப்படும் வண்ணம் நடந்துகொள்ளக் கூடாது என்பதை எடுத்துக் காட்டி எச்சரிக்க விரும்புகிறோம்."

—இவ்வாறு, 29-5-56 'தின மலர்' இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

ஏமாளிகளாக்கியோர் மீது சர்க்கார் வழக்கு

புதுடில்லி, மே 29—

வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களாம்—தங்களை ஏமாளிகளாக்கிவிட்டு, கோடிக்கணக்கான பணத்தை 'ஏப்பம்'விட்டவர்கள்மீது, இந்திய சர்க்கார்!

'ஜீப்கார்'கள் வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்துகொண்ட பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று, டெல்லி சர்க்காரின் திறமைக் குறைவால்—ஏமாளித் தனத்தால் கோடிக் கணக்கான பணத்தை மோசடி செய்துவிட்டது அல்லவா? அவர்கள் மீதுதான் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களாம், டெல்லி சர்க்கார்!

தகவல் தந்திருக்கிறார், தற்காப்பு மந்திரி டாக்டர் கட்ஜு—மக்கள் சபையில்!

21—வயதுக்குள் மணமாகியிருந்தால்!

சர்க்கார் துறையில் வேலை கிடையாதாம்

பாட்னா, மே 29—

புதிதாக அரசாங்கவேலை பெறுபவர்கள் திருமணம் புரிந்துக் கொள்ளும் வயது நிர்ணயத்தை 23—லிருந்து 21 ஆக குறைக்க பீகார் அமைச்சரவை முடிவு செய்துள்ளதாம். இதன்படி 21 வயதுக் குட்பட்டவர்களுக்கு மணமாகியிருப்பின், அவர்களுக்கு சர்க்கார் துறையில் வேலை கிடையாதாம்.

சிங்கப்பூர்: பேச்சுவார்த்தை நடத்த பிரிட்டன் மறுப்பு

மார்ஷல் யோசனை நிராகரிப்பு

சிங்கப்பூர், மே 30—

சிங்கப்பூருக்கு விடுதலை அளிப்பது பற்றி அண்மையில் லண்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றதால், அப்பேச்சுவார்த்தையை மீண்டும் துவக்க வேண்டுமென்று பிரதமர் டேவிட் மார்ஷல் தெரிவித்த யோசனையைப் பிரிட்டன் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

'எண்ணிக்கை' தருகிறார் மத்திய அமைச்சர்!

புதுடில்லி, மே 29—

"1950-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் 10,962 பேர்கள் காவல் கைதிகளாக இருந்தனர்; ஆனால், 1954-ம் அக்டோபர் 1-ந் தேதியன்று மிகச் சிலர்தான் கைதிகளாகயிருந்தனர்; இவ்வாண்டு முதல் மூன்று மாதத்தில் 160 பேர்கள் கைதாயினர்; 96 பேர்கள் விடுதலையாயினர்," என்று, மக்கள் சபையில் உள்நாட்டமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்த் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகள் பல முறை படுகாயப்பட்ட வரலாறு!

கூட்டணிகளில் அவர்கள் ஈடுபடுவது எதற்காக?

இவர்களுக்கு நாம் அனுதாபமா காட்ட வேண்டும்?

காங்கிரசோடு ஒத்துழைக்க ஆயத்தமாம் - தி. மு. கழகத்துடன் அணிசேர நிபந்தனையாம்

'கொள்கைக் குழப்பம்' குறித்து சம்பத் விளக்கம்

கொள்கைத் துறையில் எத்தனை முறை கம்யூனிஸ்டு கட்சியினர் குட்டிக் கரணங்கள் அடித்திருக்கின்றனர்?

இந்தியக் கம்யூனிஸ்டுகளின் வெளிநாட்டுக் கொள்கையில், எத்தனை பெரிய முரண்பாடுகள் மலிந்து கிடக்கின்றன?

இப்படிப் பெரும் முரண்பாடுகளைக் கொண்ட ஒரு கட்சியிடத்தில் நமக்கு அனுதாபம் பிறக்கவேண்டுமா? அல்லது இவர்களைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை பிறக்கவேண்டுமா? அல்லது, இவர்கள் பாசாங்குக்கரார்களா? என்ற சந்தேகம் பிறக்கவேண்டுமா?

என்பனவற்றை யெல்லாம், தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் ஆராய்ந்து உரைத்திருப்பவைதான் கீழே தரப்படுகின்றன.

மாநில மாநாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது:—

"நடைபெற்ற உலக யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று கம்யூனிஸ்டுகள் கூறிய போது, அவர்களுக்கு இந்தியாவில் ஒரு பாதுகாப்புக் கிடைத்தது.

"காங்கிரஸ், அப்போது அந்த யுத்தத்தை 'ஏகாதிபத்திய யுத்தம்' என்று சொல்லிக் கொண்டிருந்தது. அந்தப் 'பெரிய பஜனை கோஷ்டி'யோடு, இந்தச் சின்ன 'பஜனை கோஷ்டி'யும் சேர்ந்துகொண்டு 'ஏகாதிபத்திய யுத்தம், ஏகாதிபத்திய யுத்தம்,' என்று பாடி வந்ததால், வேறுபாடு தெரியவில்லை!

ஆனால்..........! மறுபடியும் ரஷ்யா என்ன காரணத்தாலோ—நிச்சயமான காரணமான ரஷ்ய மக்களின் நல்வாழ்வு கருதி—ஜெர்மனியுடன் யுத்தம் தொடுத்தது; உடனே, இந்த 'பெரிய பஜனை கோஷ்டி'யிலிருந்து பிரிந்து, இந்த 'சின்ன பஜனை கோஷ்டி,' குறுக்கே சந்து ஒன்றில் புகுந்து 'இது மக்கள் யுத்தம்; மக்கள் யுத்தம்' என்றுபாட ஆரம்பித்தது!

"ஏகாதிபத்திய யுத்தம், என்ற பல்லவிகூட முடிந்திருக்காது; அதற்குள்ளாக, 'மக்கள் யுத்தம்' என்று பாடஆரம்பித்து விட்டார்கள்!

"இப்படி, ரஷ்யா சொல்லுவதையே, திருப்பித் திருப்பிச் சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளைபோல — எது சொன்னாலும் 'ஆமாம்' போடும் 'ஆமாம் சாமி'கள்போல—எசமானன் கூறுவதையே திரும்ப ஒலிக்கும் எடுபிடியைப் போல நடந்துகொள்ளுவதையே தங்களின் நடைமுறையாக வைத்திருக்கின்றனர் கம்யூனிஸ்டுகள்!"

"ரஷ்யத் தலைவர்களான குருஷ்சேவ், புல்கானின் ஆகியோர் இந்தியா வருமுன்னர், 'நேரு சர்க்கார் ஒழிக', 'மக்கள் விரோத சர்க்கார் ஒழிக', 'ஜனநாயக விரோத சர்க்கார் ஒழிக', 'சர்வாதிகார சர்க்கார் ஒழிக'. 'இந்த நேரு சர்க்கார் ஒழிந்தால்தான், மக்களுக்கு சுபீட்சமான வாழ்வு கிடைக்கும்'. என்று பேசிவந்தனர், கம்யூனிஸ்டுகள்!

"'காங்கிரசிற்கு உண்மையான எதிரிகள்—கலங்காத, கரையாத எதிரிகள் நாங்கள்தான்; மற்றவர்கள் எல்லாம் காங்கிரசில் கரைந்து விடக்கூடியவர்கள்,' என்றும் பேசினர்; ஆனால், இன்று நிலை என்ன?

"நேரு ரஷ்யா சென்றார்; அவருக்கு அங்கே தரப்பட்ட வரவேற்புச் செய்திகளையும், படங்களையும் இந்த நாட்டுப் பத்திரிகைகளில் கண்டனர் கம்யூனிஸ்டுகள்; 'தங்கள் தந்தையர் நாடான ரஷ்யாவில், மக்கள் விரோதமான சர்க்காரின் தலைவருக்கு எப்படி இவ்வளவு பெரிய வரவேற்புக் கிடைக்கிறது?' என்று திகைத்தார்கள்; குழம்பினார்கள்!

"மேலிடத்திலிருந்து இவர்களுக்குத் தாக்கீது வந்திருக்கிறது—'இது குறித்து நீங்கள் சிந்திக்கவும் கூடாது; கண்ணை மூடிக் கொண்டு பத்து எண்ணிக்கொண்டிருங்கள்; ஒரு மாறுதல் விளையும்'—என்று! இந்தியக் கம்யூனிஸ்டுகளின் சிந்தனை ஸ்தம்பித்து நின்றது!

"பின்னர் சில மாதங்களுக்கெல்லாம், புல்கானினையும், குருஷ்சேவையும் ஏற்றிக்கொண்டு விமானம் ஒன்று டில்லியில் வந்து இறங்கியது; நேரு பண்டிதர் அமோகமாக அவர்களை வரவேற்றார்; கம்யூனிஸ்டுகளின் சுரம் குறைந்தது!

"பின்னர் கூடி, தீர்மானம் ஒன்று போட்டார்கள். என்ன அந்தத் தீர்மானம்?

"'உலக சமாதானத்திற்காகப் பாடுபடும் உத்தமர்கள் வரிசையில், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் முக்கியமான ஒருவர் என்பதை நாங்கள் தாமதித்தாலும், நிச்சயமாக இப்போது தெளிவாக உணர்ந்துகொண்டோம்,' என்று, அந்தத் தீர்மானம் கூறிற்று.

"அந்தத் தீர்மானத்தின் கீழே பண்டைக் காலத்தில் தாங்கள் உயிரோடு இருந்தார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்வதற்காக, 'நேரு உலக சமாதானத்திற்காகப் பாடுபடுகிறார் என்பதை நாங்கள் ஒத்துக்கொண்டாலும், உள்நாட்டில் அவர், மக்களுக்கு விரோதமான—ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் என்பதையும் நாங்கள் கண்டிக்காமலிருப்பதற்கில்லை,' என்றும் எழுதிக் காட்டினார்கள்!

"எவ்வளவு பெரிய முரண்பாடு? சொந்த நாட்டில் ஜனங்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறான் ஒருவன்; சொந்த மக்களின் உரிமைகளைப் பறிக்கிறான்; அவர்களுக்கு உரிமை தர மறுக்கிறான்; 'ஜனநாயகம் என்று நான் சொல்லுவேன்; ஆனால், நீங்கள் உங்கள் வாழ்வில் ஜனநாயகத்தை காண முடியாது' என்று கூறும் ஜனநாயக உடை தரித்த சர்வாதிகாரியாக விளங்கிக் கொண்டிருக்கிறான்; அவன் எப்படி உலக சமாதானத்திற்காகப் பாடுபட முடியும்?—என்று கம்யூனிஸ்டு நண்பர்கள் கிஞ்சிற்றும் சிந்தித்ததாகக் காணவில்லை; எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை; எண்ணிப் பார்ப்பதற்கான உரிமை, அவர்களுக்கு அவர்கள் கட்சியில் தரப்படவில்லை.

"இன்று கம்யூனிஸ்டுகள் எந்த அளவுக்குச் சென்றிருக்கிறார்கள் தெரியுமா?

"அடுத்த ஆறு மாதத்திற்குள் பாலக்காட்டில் கூடி இன்னுமொரு தீர்மானம் போட்டார்கள்:—

"**முதல் கட்டம்:** பண்டித நேரு உலக சமாதானத்திற்கு விரோதி; உள்நாட்டில் ஜனங்களின் பகைவன்.

"**இரண்டாம் கட்டம்:** பண்டித நேரு உலக அமைதிக்குப் பாடுபடும் உத்தமர்; உள்நாட்டில் மட்டும் ஜனங்களுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

"**மூன்றாவது கட்டம்:** பண்டித நேரு உலக சமாதானத்திற்காகப் பாடுபடுபவர் மட்டுமல்ல; உள்நாட்டில், இந்திய மக்களின் சுபீட்சத்திற்காக, எத்தனையோ தொல்லைகளுக்கிடையேயும் சிரமப்பட்டு, இரண்டொரு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்திருக்கிறார் என்பதால், அவரை நாங்கள் பாராட்டுகிறோம்—என்று தீர்மானம் போட்டார்கள்.

"இந்த மூன்றாவது கட்ட தீர்மானம்தான், பாலக்காட்டில் நிறைவேறிய தீர்மானமாகும்.

"இந்த மூன்றாவது கட்டத்தைக் கூட, வாரக் கணக்கில் தாண்டி நான்காவது கட்டத்திற்கு வந்துவிட்டனர், கம்யூனிஸ்டுகள்!

"என்ன அந்த நாலாவது கட்டம்? இன்று காலை செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது.

"'காங்கிரஸ் சர்க்காரோடு ஒத்துழைப்பதற்கு, கம்யூனிஸ்டு கட்சி தன் ஆயத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது,'—என்பதுதான் அந்தச் செய்தி!

'ஆயத்தம் துரையே! நான் தயார்! தயார்!! என்னை அழைத்துக்கொள்ளத் தாமதம் ஏன்?'—என்று அந்தக் கன்னி—அல்ல, அல்ல—பல அரசியல் விவாகரத்திற்குப் பிறகு மீண்டும் ஒரு கணவனைத் தேடிக்கொண்டிருக்கும் அந்த மாது, அறிக்கை விடுத்திருக்கிறார்.

"'என்னைப் போன்ற எத்தனையோ மாதுக்களை மனைவியாகப் பெற்றிருக்கும் நேருவைத் தலைவராகக் கொண்ட காங்கிரசே! என்னையும் உங்கள் அரண்மனை அந்தப்புரத்தில் ஒரு தூணில் கட்டி வையுங்கள்,'—என்று கேட்டுக் கொண்டிருக்கிறார், அந்த மாது!

"காங்கிரசாருடன் ஒத்துழைக்க ஆயத்தம்! தி. மு. கழகத்துடன் கூட்டுச் சேர நிபந்தனை! இப்படி இருக்கிறது, கம்யூனிஸ்டுகளின் போக்கு!

"அங்கே ஆயத்தச் சம்மதம்! இங்கே நிபந்தனை! இயற்கைதானே!

"முதுமையை அடைந்துவிட்டவர்கள், இளமையை என்றும் பெறமுடியாது; இளைஞன் ஒருவனை என்றைக்கும் கணவனாகப் பெறமுடியாது; என்றாலும், அந்த முதாட்டிக்கு ஒரு ஆசை! இளைஞன் ஒருவனை அழைத்துப் பார்ப்போம்; முடியாது போய்விட்டால்—'ஏன் அந்தச் சுந்தரரூபன் உனக்குக் கிடைக்கவில்லை?' என்று எவரேனும் கேட்டால்—'நான் ஒரு பயங்கரமான நிபந்தனையை விதித்தேன்; பாபம்! அந்த இளைஞனால் அது முடியவில்லை என்று

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணா, பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோரும், திருச்சி மாநில மாநாட்டில் பணி புரிந்த முக்கியமானவர்களில் சிலரும்:

தோழர்கள் பொன்மலை கைலாசம், சென்னை கே. எம். கண்ணபிரான், கே. கோவிந்தசாமி, திருச்சி ராபி, வரவேற்புக்குழுச் செயலாளர் எம். எஸ். மணி, [illegible] வேற்புக் குழுத் தலைவர் அம்பில் தர்மலிங்கம், பொன்மலை பராங்குசம், நகரசபை உறுப்பினர் காசுசுந்தரம், திருச்சி என். சாம்பு, டி. பி. அழகுமுத்து, [illegible] மணியம், முத்துக்கருப்பன், சென்னை நல்லதம்பி, கவுண்டம்பட்டி முத்து, பரமசிவம், கரூர் கிட்டு, டி. வி. பொன்னுசாமி, நாராயணசாமி, என். எஸ். [illegible] ஆகியோரைப் படத்தில் காணலாம்.

—போட்டோ: [illegible]

ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிக்கொள்ளலாம்,' என்று நினைத்து 'இளைஞனே! என்னோடு நீ சேரவேண்டுமானால், உன் இளமையைக் கொன்று விட்டு வா!' என்று நிபந்தனை விதிக்கிறார், அந்த மூதாட்டி! பாபம்!!

"காங்கிரஸ் சர்க்காரோடு ஒத்துழைக்க ஆயத்தச்சம்மதமாம்! தி. மு. கழகத்துடன் அணி அமைக்க நிபந்தனையாம்! என்ன வேடிக்கையான, விசித்திரம்!

"இந்த விசித்திரங்களைச் செய்து கொண்டிருக்கும் கம்யூனிஸ்டு கட்சி தான், 'திராவிட நாடு தீதானது' என்று பேசுகின்றது—தான் முன் சொன்னதை மறந்துக்கொண்டே சொல்கிறது—'தீதானது' என்று!

"நாமெல்லாம் பெருமதிப்புக் காட்டும் தலைவர்—நான் அவரையும் அண்ணா என்று அழைப்பது வழக்கம்—அந்தக் கம்யூனிஸ்டு தலைவரை நான் ஒரு முறை சந்தித்தபோது, 'ரஷ்யாவின் அரசியல் அமைப்பில் 16 நாடுகள் இருக்கின்றன; அந்தப் பத்தோன்பது நாடுகளுக்கும், ரஷ்யக் கூட்டாட்சியிலிருந்து, என்றைக்கு விரும்பினாலும்—பாக்கி 18 நாடுகளின சம்மதத்தைத் துளியும் பெருமலேயே—தங்கள் சட்டசபைகளில் தீர்மானம் நிறைவேற்றிக் கோள்வதின் மூலமே பிரிந்துசெல்ல-தனிச் சுதந்திர நாடாகவாழ உரிமை இருக்கிறது; ரஷ்ய அரசியல் சட்டத்தில் அந்த உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது; இதனைச் 'சரி' எனக்றீர்கள; இந்த அரசியல் சட்டத்தை—உலகத்திற்கு வழி காட்டியான அரசியல் சட்டம்—என்று எடுத்துக் காட்டுகிறீர்கள்; ஆனல் இந்த உரிமை நமக்குக் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் ஏன் போராடவில்லை? திராவிடநாடு என்று நாங்கள் கூறுவது வேண்டுமானல் உங்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம்; நாங்கள், சற்றுப் பொறுத்துக் கோள்கிறோம; ஆனல், தனித் தனியே தமிழ்நாடு, ஆந்திரம் கேரளம், கர்நாடகம், மராட்டியம் என்று இந்திய யூனியனில் அரசுகள் (States) ஆக இருப்பவற்றிற்கு யூனியனிலிருந்து பிரிந்துபோகிற உரிமை தேவை என்பதை நீங்கள் ஏன் வலியுறுத்தவில்லை? போராடவ்லலே?' என்று நான் அவரை ஆசையும் மரியாதையும் போட்டிபோட கேட்டேன்.

"அதற்குஅவர்'நாங்கள் போராடவில்லையே தவிர, அதை மறுத்துப் பேசவில்லையே!' எனறு தான் கூறினர். சரியான சமாதானம் ஆகுமா?

"அப்போதுதான் நான் புரிந்துகொண்டேன் — 'எவ்வளவு பெரிய முக்கியமான பிரச்சினையில், எவ்வளவு பெரிய முக்கியமான நேரத்தில், கம்யூனிஸ்டு கட்சி எவ்வளவு ஆபத்தான மௌனம் பூண்டிருக்கிறது'-என்பதை!

"ரஷ்யாவில் இருக்கும் உரிமை, இந்தியாவில் வேண்டுமென்ற என் [illegible]கள் கோரவில்லை?—என்று [illegible]டால், ஏதோ, வழுக்கு நிலத் [illegible] இருப்பதுபோல சாக்கு [illegible]க் காட்டினர்கள்; என் [illegible]காவது, ஒரு நாளைக்குத் தான் என், திக்கொள்ள முடியும் என்ற ஆச்சயை ஊட்ட முயற்சித் அரசி[illegible]ல், இன்று, 'மைனரிட்டி வதை[illegible]ய இனங்கள் தங்களின் ஒப்பிய[illegible]மையை அரசியலில் கோஷ்டி[illegible]சொன்ன — நிலைநாட் முயற்சிப்பதே தவறு

னது; தனித்தன்மை பற்றிப் பேசுவதே நாட்டிற்குச் செய்யும் பெரும் துரோகம்,' என்று கொஞ்சம் கூடப் பதறுமல், கூசாமல் பேசுகிறார்கள்!

"'இதுபோன்று, ஏராளமான முரண்பாடுகளை நாம் சுட்டிக் காட்ட முடியும்.

"எதிலெடுத்தாலும் முன்னுக்குப் பின் முரண்பாடு; ஏன்? இந்த 'ஏன்' என்ற கேள்விக்குக் கிடைக்கும் விடையைப் பொறுத்துத் தான், இந்தக் கட்சிக்காரர்கள்மீது நமக்கு அனுதாபம் பிறக்க வேண்டுமா?—இவர்களைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கைப் பிறக்க வேண்டுமா?—என்பதோ, அல்லது இவர்கள் போலிகள்; பாசாங்குக் காரர்கள்; பொது வாழ்வில் மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்பாது, பொது வாழ்வு என்ற பெயரால், தங்களுக்குப் பிடித்தமான சில 'அந்நிய சக்தி'களுக்கு ஆள் பிடிக்கும் ஏஜெண்டுப் பணிபுரிகிறார்களா என்பதையோ, நாம் முடிவு செய்ய இயலும்.

"எல்லாக் கட்சிகளுமே, தங்களின் இலட்சியம் ஈடேற வழி என்ன—வகைஎன்ன? தங்கள் கொள்கைகள் கோலோச்ச வழி என்ன?—என்றுதான் ஆரம்ப முதலே எண்ணிக்கொண்டிருக்கும் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும், அவர்கள் கண் முன்னுல் இலட்சியம்தான் எப்போதும் தட்டுப்பட்டுக் கொண்டிருக்கும்.

"ஆனல், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் அந்தச் சின்ன வரலாற்றை உற்று நோக்கினுல், இலட்சியத்தோ கூடிய சில பேர், கூடிவிட்ட மறுகணமே இலட்சியததை மறந்து, கூடிவிட்ட தங்களுக்கு மட்டுமே அதிகாரம் கிடைப்பது எப்படி? கூடியுள்ள தாங்கள் மட்டுமே இந்த நாட்டு அரசியலில் ஏகபோகமாக உலவுவதற்கு—ஏனைய கட்சிகள் எல்லாம் செத்து மடிந்து, ஏனென்று கேட்க ஆளற்றுப்போய், தனிக் கோலோச்சுவதற்கு வழி என்ன என்று எண்ணி, அதிகார போதையோடு—அதிகாரப் பேராசையோடு, அந்த அதிகாரத்தை அடைய பொறுப்பற்ற முறையில் தான்தோன்றித்தனமாக முயற்சித்ததின் விளைவுதான் அவர்களிடத்தில் இலட்சியம், கொள்கை ஆகியவை இடம்பெற முடியாமல், முக்கியத்துவமற்றுப் போய்விட்டன என்பதைத் தெரிய முடியும்.

"மேலும், கம்யூனிஸ்டு கட்சியினர், 1935-லிருந்து கூட்டணிகளில் வேகமாக ஈடுபட்டுவந்திருக்கிறார்கள்.

"முதன் முதலில், காங்கிரசுக்கு உள்ளேயே சோஷலிஸ்டுக் கட்சி இருந்தது; அந்த சோஷலிஸ்டுக் கட்சிக்கு உள்ளேயே கம்யூனிஸ்டுக் கட்சி இருந்தது; இந்த சோஷலிஸ்டுக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும் கூட்டணி சேர வேண்டும் என்று கூறி, கம்யூனிஸ்டுகள் கூட்டணி அமைத்தார்கள்.

"என்ன எண்ணத்தோடு சேர்ந்தார்கள்? 'சோஷலிஸ்டுகளோடு சேர்ந்து, சோஷலிஸ்டு கட்சியின் சக்தி வாய்ந்த இயந்திரத்தைக் கைப்பற்றிக்கொண்டு, சோஷலிஸ்டுகளை இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டு பதவியை எட்டிப் பிடிப்போம்,' என்று திட்டமிட்டுக் கொண்டுதான் சேர்ந்தார்கள்; ஆனல் என்ன ஆயிற்று? அந்த முயற்சியில் தோற்றார்கள்.

"இவர்கள் சேர்ந்த ஓராண்டிற்குள்ளாகவே சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த எம். ஆர். மசானி என்பவர், கட்சிக்குள்ளேயே போராடினார்; 'கம்யூனிஸ்டுகளின் நேசம் நேர்மையானது அல்ல; தவறான நோக்கம் கொண்டது,'—என்று வாதாடினார். 'கம்யூனிஸ்டுகளின் சதி' என்றொரு புத்தகத்தை வெளியிட்டார். விளைவு என்ன? 1941-ல், சோஷலிஸ்டுகளால், கம்யூனிஸ்டுகள் எட்டி உதைத்து வெளியே துரத்தப் பட்டார்கள்.

"அதன் பிறகு, காங்கிரஸ் கமிட்டியில் சேர்ந்து இடம் பிடிக்கத் திட்டமிட்டார்கள்; காங்கிரசை அண்டினர்கள்; இவர்களின் தீயநோக்கைத் தெரிந்து கொண்டு, படேல் முறைத்துப் பார்த்து, காதைப்பிடித்துத் திருகி, வெளியே கொண்டுவந்து, 'இதோ நான் ஒன்று தருகிறேன்' என்று கூறி, உதைத்து அனுப்பிவிட்டார் இவர்கள், எங்கெங்கோ, மூலைக்கொருவராகச் சிதறிப் போனுர்கள்.

"பிறகு இவர்களுக்கு, 'கூட்டணி' என்ற நினைப்பே வரவில்லை, சில காலத்திற்கு! அடியும், உதையும் அவ்வளவு பலம்!

"பின்னர் — சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டில் குழப்பமான சூழ்நிலைகள் வளர்ந்தன; காங்கிரஸ் சர்க்கார்களின் காட்டிக்கொடுக்கும் போக்கினுல் எதிர்ப்புச் சக்திகள் வளர்ந்தன; 'கூட்டணி அமைத்தால் என்ன?' என்ற எண்ணம் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்டது—மறுபடியும் நீர் ஊற ஆரம்பித்தது; சென்னையைப் பொறுத்த வரையில், இவர்கள்தான் மிகவும் முயற்சி செய்து கூட்டணியைக் கூட்டினர்கள். அப்பொழுது என்ன கருத்தோடு கூட்டினுர்கள்? 'கூட்டணி ஒன்று கூட்டுவோம்; கூட்டிய பிறகு ஒவ்வொருவரையும் குத்திச் சாகடிப்போம்; பிறகு கூட்டணியில் மிச்சம் நாங்கள்தான்; எல்லாம் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்லுவோம்,' என்று, தங்களை மிகச் சாமர்த்தியசாலிகள் என்று கருதிக்கொண்டு, திட்டம் போட்டு, கூட்டணியில் சேர்ந்தார்கள். என்ன ஆயிற்று? ஆந்திராவிலிருந்து தள்ளாடிக் கொண்டே பிரகாசம் என்ற முதுகிழவர் வந்தார்; எழுந்திருந்த தோழர் இராமமூர்த்தியைப் பார்த்து, 'உட்காருங்கள்' என்றார்; தோழர் கல்யாணசுந்தரத்தைப் பார்த்து, 'நான், நீங்கள் பேசுவதைக் கேட்க விரும்பவில்லை; உட்காருங்கள்', என்றார்; 'நீங்கள் சொல்லுவதைக் கேட்க எனக்குப் பொறுமையில்லை; நான் பேசுகிறேன்—நீங்கள் கேளுங்கள்,' என்றார். பிறகு, கூட்டணியை இவர்கள் என்ன நோக்கத்தோடு ஆரம்பித்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறுமல், வேறு யாரோ சிலர் அதில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள்.

"பிறகு இவர்கள் முனுக ஆரம்பித்தார்கள்; 'கூட்டணியில் துரோகிகள் சேர்ந்து விட்டார்கள்; ஆகவே, உண்மையான மக்கள் தொண்டர்களாகிய நாங்கள், கூட்டணியிலிருந்து விலகுகிறோம்' என்று கூறிவிட்டு, நல்ல 'படுகாய'த்தோடு வெளியில் வந்தனர்.

"நாம் இப்போது அமைத்தோம்—அமைத்திருக்கிறோம், கூட்டணி; அண்ணா அவர்கள் தன்னுடைய கண்ணியத்திற்கும், தமிழ் நாட்டில் அவர் வளர்த்துக் கொண்டுவர விரும்புகிற அரசியல் கண்ணியத்திற்கும் ஏற்றவகை யில், தாராள மனதோடு அவர்களையும் அழைத்தார்கள்; 'தாராள மனது' என்று பாராட்ட மட்டும் நான் இதைக் கூறவில்லை; 'அவர்களை எவ்வளவு தாராளமாக உலவ விட்டாலும் பரவாயில்லை; ஆபத்து ஒன்றுமில்லை,' என்ற தைரியத்தில் அவர்களை அனுமதித்தார்கள்; இன்றைக்கும் கூட்டணியிலிருந்து விலகுவதற்கு அவர்களுக்குச் சாக்குப்போக்குக் கிடைக்கவில்லை.

"இப்போது அவர்கள் 'தஜம்' தொடுத்திருக்கிறார்கள் — பாலக்காடு மாநாட்டிற்குப் பிறகு!

"'திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகள் வகுப்புவாதக் கட்சிகள்' என்பன போன்ற தீர்மானங்கள்!

"தி. மு. கழகம் தன்னுடைய மாநில மாநாட்டைக் கூட்டியிருக்கும் இந்த நேரத்தில், 'திராவிட முன்னேற்றக் கழகமே! உனக்கு ஒரு நிபந்தனை; செத்துப் போவாயே! சேர வாராயோ!' என்ற பேச்சு!

"எதற்காக நான் இதைக் கூறுகிறேன் என்றால், இன்னும் இவர்கள் எத்தனை கூட்டணிகளை அமைக்க ஆயுள் பலத்தைப் பெற்றிருந்தாலும், எந்தக் கூட்டணியையேனும் இவர்கள் கைப்பற்றிவிட முடியும் என்று எண்ணினுல். 'அவர்கள் தப்புக் கணக்குப் போடுகிறவர்கள்' என்பதை எடுத்துரைப்பதற்குத்தான், நான் இந்தச் சம்பவங்களை எடுத்துச் சொல்லுகிறேன்

"இதனுடைய அடிப்படை நோக்கம் என்ன? இலட்சியம் எதுவும் இல்லை; கொள்கை எதைப்பற்றியும் கவலை இல்லை; ஆனல், இலட்சியத்தோடு கூடிவிட்ட சிலர், கூடிய மறுகணமே இலட்சியத்தை மறந்துவிட்டு கூடிய தாங்கள் மட்டுமே இந்த நாட்டு அரசியலில் ஏகபோகமாக நடமாட வேண்டும் என்ற கீழ்த்தரமான — காட்டுமிராண்டித்தனமான—மிருகத்தனமான வெறிக்குப் பலியாகிவிட்ட சிலபேருடைய தான்தோன்றித்தனமான போக்கின் விளைவுதான் இது என்பதை எடுத்துக் கூறுவதற்குத்தான், இதை உங்கள் மத்தியில் எடுத்துச் சொல்லுகிறேன்."

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

சொற்பயிற்சிக் கூட்டம்

2—6—56 மாலை 6-30 மணியளவில், வடசென்னை குறள்நெறிக் கழகச் சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் நெடுமாறன் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் 'யான் கண்ட பெரியார்' என்னும்பொருள் பற்றித் தோழர் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

சென்னை —பெத்துநாயக்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் 2-6-56 பிற்பகல் 2-30 மணிக்கு மேல், சென்னை முத்துகிருஷ்ணன் தெரு 15-ஆம் எண்ணுள்ள இல்லத்தில், திருக்குறள் வகுப்பு நடைபெறும். பேராசிரியர் மயிலை சிவமுத்து, 'ஊக்கமுடைமை' என்ற தலைப்பில் பேசுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாபெரும்

பொதுக்கூட்டம்

3-6-56 ஞாயிறு மாலை 6-மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

மாநில மாநாட்டின் முடிவுகள்

குறித்து விரிவுரையாற்றுவார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா

3—6—'56 நிகழ்ச்சிகள்:

இயல் அரங்கு:

திரு. ச. சோமசுந்தரபாரதியார் தலைமையில் அருணாசல தேசிக பரமாச்சாரியாரின் ஓவியக் காட்சித் திறப்பு விழா நடைபெறும். திரு. மு. ஆரோக்கியசாமி—'நாயக்கர் காலம்'; திரு. மயிலை – சீனி வேங்கடசாமி — 'பௌத்தம்'; திரு. வை. மு. நரசிம்மன் — 'கட்டிடக் கலை'; திரு. ம. பொ. சிவஞானம்— 'பழந்தமிழர் விழாக்கள்'; திரு. பு. ஆலாலசுந்தரம்(செட்டியார்) —'மறுமலர்ச்சி உரை நடை'— ஆகிய தலைப்புகள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

இசை அரங்கு:

திரு. சித்பவானந்தா தலைமையில் திருமதி எம் எல் வசந்தகுமாரி குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெறும்.

நாடக அரங்கு:

அமைச்சர் திரு. எம். ஏ. மாணிக்கவேலு தலைமையில், டி. கே. எஸ். சகோதரர்கள் குழுவினரின் 'இராஜஇராஜ சோழன்' நாடகம் நடைபெறும்.

சேலம் நகர தி. மு. கழக பொதுஉறுப்பினர் கூட்டம்

"3-6-56 காலை 10-மணிக்கு சேலம் கூட்டுறவு 'தங்கல் மனை'யில், மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில், கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, நகரக் கிளையில் காலியாக இருக்கும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும்" என்று, செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

திருமணம்

3-6-56 காலை 7-30 மணியளவில் வளவனூரில், ஊராட்சி மன்றத் தலைவர் கே. எம். முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில், தோழர் சுப்பிரமணியன்—தோழியர் முத்துலட்சுமி திருமணம் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ. அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

சர்வதேச குழந்தைகள் தின விழா —சிறுவர்கள் சங்கத் திறப்பு விழா

2—6—56 மாலை 6 மணிக்கு, திரு பி. பாலகோபால் தலைமையில், பெரம்பூர் பாரக்ஸ் ரோடிலுள்ள லேட் மெத்தாடிஸ்ட் பள்ளியில் மேற்படி விழா நடைபெறும். திரு. சேரன், நகர சிறுவர்கள் சங்கத்தைத் திறந்துவைப்பார்.

சூளை நகர இளைஞர் கழகம்

2-6-56 மாலை 6-30 மணிக்கு மாணிக்கச் செட்டித் தெரு, கழக மனையில், தோழர் கே. வி. சிவபூஷணம் 'மதமும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் பேசுவார்.

சபைத் தலைவரை வெளி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சபைத் தலைவர், அந்த உறுப்பினர் சபையிலிருந்து வெளியேற வேண்டும் என்றுகோரியிருக்கிறார் கோபமடைந்த அந்த உறுப்பினர், சபைத் தலைவரை நோக்கி, நீங்கள் வெளியேறுங்கள்' என்று கோஷமிட்டாராம்!

இதைக் கண்டதும், முதன்மந்திரி டாக்டர் கான்சாகிப் எழுந்து, உறுப்பினர்கள் சபையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.